## இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபை - 2013

இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்க தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 26 ஆம் இலக்க இலங்கை இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு ரூபா 26,702 ஆல் குறைத்துக் கணிப்பிடப்பட்டிருந்ததுடன் இதன் விளைவாக, மீளாய்வாண்டின் இலாபம் அத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

சுழற்சி நிதிய கடன்பட்டோர் மீதிக்கும் பொதுப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் கடன்பட்டோர் மீதிக்கும் இடையில் ரூபா 249,596 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

#### 2.2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

(அ) நானாவித கிடைக்க வேண்டியவைகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 154,400 ஆன மீதி 3 ஆண்டுகளிற்கு மேல் அறவிடப்படாமல் இருந்ததுடன் அவற்றினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 முதல் 2012 வரையான காலத்தின் போது அபிவிருத்தி செயற்திட்டங்களிற்காக பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட முற்பணங்களில் ரூபா 303,337 ஆன தொகை மீளாய்வாண்டு இறுதிவரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிக்கான தொடர்பு | விபரங்கள் |
|---|---|
| (அ) 1971 இன் 08 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய (திருத்திய) அதிகாரச்சட்டம் மற்றும் 1980 இன் 40 அம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டம் | 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் 04 அமைய ஊழியர்களிற்கு ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்புகள் முறையே ரூபா 355,398 மற்றும் ரூபா 53,310 ஆன பங்களிப்புப் பணத்தை செலுத்துவதற்கு அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2010 யூன் 10 ஆந் திகதிய ஈடி/ஏபீ/ஈ9/5/விஓ-ஐ-ii ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கை | சுற்றறிக்கைக்கு முரணாக ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுகளிற்காக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் சம்பளங்களாக ரூபா 3,004,784 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2011 செப்தெம்பர் 15 ஆந் திகதிய 58(2) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | களப்பரிசோதனை மற்றும் அபிவிருத்தி குழுக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு நிதி ஏற்பாடுகள் இல்லாதிருப்பினும் மேற்கூறப்பட்ட சுற்றறிக்கை அடிப்படையில் அதிகாரசபையின் முகாமைத்துவ சபையின் 05 உறுப்பினர்களிற்காக ரூபா 320,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1. நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,090,819 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் விளைவுகள் ரூபா 38,770,251 பற்றாக்குறையானமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 40,861,070 ஆன அதிகரிப்பைக் காட்டுகின்றது. 66 சதவீதத்தால் அரசாங்க மானியங்களின் அதிகரிப்பு மற்றும் 40 சதவீதம் மற்றும் 68 சதவீதத்தால் முறையே வேறு செலவினங்கள் மற்றும் அபிவிருத்திச் செலவினங்களின் குறைவு என்பன பிரதானமாக பாதித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

(அ) 2012 ஆம் ஆண்டு தொடர்பில் 2013 ஆம் ஆண்டில் நானாவித வருமானம் 22 சதவீதத்தல் அதிகரித்திருந்தது. பிடிகாசு, மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பங்களின் அறவீடு மற்றும் பிணையாளிகள் உடன்படிக்கைகளை மீறியதனால் இழந்த பணம் என்பன இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

(ஆ) ஏனைய செலவினத்தில் மொத்தம் ரூபா 1,356,262 அல்லது 38 சதவீதம் பணிப்பாளர் சபை கூட்டங்களிற்கான படிகள் மற்றும் பராமரிப்புகளிற்காக ஏற்பட்டிருந்தது.

(இ) 2012 ஆம் ஆண்டு தொடர்பில் மீளாய்வாண்டிற்கான அபிவிருத்திச் செலவினம் 68 சதவீத குறைவொன்றைக் காட்டியதுடன் மீளாய்வாண்டிற்காக பெறப்பட்ட ஏற்பாடுகளின் 50 சதவீதம் பயன்படுத்தாதிருந்தமை இதற்கான காரணமாக இருந்தது.

### 3.3 வேறு நிறுவனங்களிற்கு எதிராக அல்லது நிறுவனங்களால் தொடங்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள்

05 வெளிநபர்களால் அவர்களிற்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் ரூபா 13.8 மில்லியன் இழப்பீட்டைக் கோரி நிறுவனத்திற்கு எதிராக 05 வழக்குகள் தொடரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2009 முதல் 2012 வரையான காலத்தின் போது அதிகாரசபையால் தொடங்கப்பட்ட ரூபா 16,477,000 பெறுமதியான 60 செயற்திட்டங்களில் செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் செயற்திட்டங்கள் தொடங்குவதற்காக வழங்கப்பட்ட

ரூபா 3,289,420 தொகையான முற்பணங்களில் ரூபா 303,337 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திவிநெகும வியாபார கடைகளின் இலாபத்தை கணிப்பிடுகின்ற போது கடைகளின் ஊழியர்களிற்கு செலுத்தப்பட்ட ரூபா 456,859 தொகையான சம்பளங்கள் கழிக்கப்பட்டிருக்காததுடன் கடைகளிற்காக பயன்படுத்திய மின்சாரம் மற்றும் தண்ணீர் போன்ற மேந்தலைச் செலவினம் உறிஞ்சப்பட்டிருக்கவில்லை. சொல்லப்பட்ட விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்ட பின்னர், திவிநெகும கடைகளில் இலாபமற்ற நிலைமை காட்டியமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ திறமையின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சுழற்சி நிதியத்திற்கான பணத்தினை சேகரிப்பதற்காக ரூபா 82,861 ஆன மேலதிக செலவினம் ஏற்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவில் மேலும் ரூபா 5,014,206 தொகை அறவிட வேண்டியிருந்தது.

(ஆ) முகாமைத்துவ குழுவின் இரண்டு உறுப்பினர்களால் 07 செயற்திட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனைகளிற்காக படிகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதிவரை அதற்காக சமர்ப்பிக்க வேண்டிய 17 பரிசோதனை அறிக்கைகளில் 04 அறிக்கைகள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.3. நிதிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் அமுலாக்கலிற்காக ரூபா 22 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரையும் ரூபா 11 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 10 நிலையான வைப்புக்கள் மற்றும் வேறு 02 வங்கிக் கணக்குகளில் ரூபா 35,871,021 ஆன வைப்புக்கள் ஊடாக அதிகாரசபையின் பிரதான குறிக்கோள்களிற்காக நிதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

### 4.4 முறைப்படி உடமையாக்கப்பட்டிருக்காத காணிகளில் செயற்திட்டத்தை ஆரம்பித்தல்

முறைப்படி உடமையாக்கப்பட்டிருக்காத காணிகளில் 03 செயற்திட்டங்களை அமுலாக்குவதற்கு ரூபா 26,693,482 தொகை செலவழித்து நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

| விபரங்கள் | ஏற்பட்ட கிரயம் | காணியின் உரிமை |
|---|---|---|
| | ரூபா | |
| தலைமை அலுவலக கட்டிடம் | 11,569,879 | பேராதனை பல்கலைக்கழகம் |
| கடுகண்ணாவ வியாபாரத்தொகுதி | 14,924,043 | போக்குவரத்து அமைச்சு |
| திவிநெகும விற்பனை நிலையம் | 199,560 | பேராதனை தாவரவியல் பூங்கா |

## 5. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவின் பிரகாரம், 2008 தொடக்கம் 2012 வரையான காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது கால அடிப்படையில் திருத்தப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கூட்டிணைந்த திட்டம் 2013 முதல் 2017 வரையான காலத்திற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

அதிகாரசபையில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 கணக்காய்வு குழு

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 7.1.4 ஆம் பிரிவின் பிரகாரம், குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடைபெற வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக எந்தவொரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டமும் நடைபெற்றிருக்கவில்லை.

### 5.4 தீர்க்கப்படாத கணக்கீட்டுப் பந்திகள்

அதிகாரசபையின் (நிர்வாகம் மற்றும் நிதி) பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக தேவையான தகைமைகளை கொண்டிராத பெண் உத்தியோகத்தர் ஒருவர் 2012 நவம்பர் மாதத்திலிருந்து சொல்லப்பட்ட பதவிக்கு பதவியுயர்த்தப்பட்டிருந்ததுடன் ரூபா 760,785 ஆன தொகை சம்பளங்கள் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) செயற்திட்ட அமுலாக்கல்
(ஆ) சுழற்சி நிதிய நிகழ்ச்சித்திட்டம்
(இ) வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டங்களின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட நெறிப்படுத்தல்
(ஈ) கணக்கீடு